www.padippakam.com



# களம் பல கண்ட யாழ் கோட்டை

## பகுதி: ஒன்று

## பிலிப் தே ஒலிவேறா

நீலவண்ணன்

### 4

*1629 ஆம் ஆண்டு நடுக்கூறு.*

கண்டி இராச்சியத்தின் மன்னனாக விளங்கிய செனறத் என்பவன், போர்த்துக்கேயரை யாழ்ப்பாணத்தில் இருந்து துரத்திவிட்டு, யாழ்ப்பாண அரசினைக் கைப்பற்றும் நோக்குடன் யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிடுமாறு படையொன்றினை அனுப்பி வைத்தான். கண்டி அத்தப்பத்து முதலியாரின் தலைமையில் 10 ஆயிரம் வீரரைக்கொண்ட படையணி யாழ்ப்பாணம் நோக்கி வந்தது. அதற்குதவியாகத் தஞ்சாவூர் அரசனின் வடக்கர் படையொன்றும் யாழ்ப்பாணம் நோக்கி வந்தது.

மணவினைத் தொடர்பால், யாழ்ப்பாணத்தின் ஆட்சியுரிமை தனக்குரியதெனக் கண்டி மன்னன் செனறத் நம்பினான். பிலிப் தே ஒலிவேறா யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி, கடைசி மன்னன் சங்கிலியனைச் சிறைப்பிடித்துக் கோவாவுக்கு அனுப்பி வைத்தான். அரச குடும்பத்தைச் சேர்ந்த பலரைக் கத்தோலிக்கராக்கினான். மூன்று அரசகுமாரத்திகளில் ஒருத்தி, டொனா கதறீனா என்ற ஞானஸ்நானப் பெயருடன் கத்தோலிக்க மதத்திற்கு மாற்றப்பட்டாள். வேறிரு அரசகுமாரிகளை சின்னமீகாப் பிள்ளை என்பான் தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்று அங்கு அடைக்கலம் பெற்றுக்கொடுத்தான்.

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயரின் பொறுப்பிலிருந்த கதறீனா இளவரசியைத் தனது மகனுக்கு மணம் முடித்து வைக்குமாறு செனறத் மன்னன் தூதனுப்பி வைத்தான். பிலிப் தே ஒலிவேறா அவனது கோரிக்கையை மறுத்துவிட்டான். ஆனால் செனறத், தஞ்சாவூர் மன்னரிடம் அடைக்கலம் புகுந்திருந்த யாழ்ப்பாணத்து இளவரசிகள் இருவரையும் வரவழைத்துத் தன்னிரு மக்களுக்கும் மணம் முடித்து வைத்தான்.

எனவே, யாழ்ப்பாண அரசாட்சியுரிமை தனக்குரியதெனக் கண்டி மன்னன் அறைகூவிப் படையனுப்பி வைத்தான். அவ்வாறு வந்த படை பச்சிலைப்பள்ளியில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றினைத் தரைமட்டமாக்கியதோடு, அங்கிருந்த இரு குருமாரையும் கொலை செய்தது. யாழ்ப்பாணத்தை நோக்கி வருகின்ற வழியிலுள்ள சில கிறிஸ்தவ தேவாலயங்களை எரியூட்டியழித்ததோடு, யாழ்ப்பாணக் கோட்டையையும் முற்றுகையிட்டது. கப்பித்தான் மேஜர் லாங்றொட் தே செயிக்லாஸ் காபிறேரா, கோட்டைக்குள்ளிருந்த படை வலிமை காணாதெனக் கண்டு எதிர்த்துத் தாக்காது இருந்தான்.

கண்டி மன்னனின் படை யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டிருந்தது. அவர்களால் கோட்டையை நெருங்க முடியவில்லை. பீரங்கிக் குண்டுகளுக்கும், துவக்குச் சன்னங்களுக்கும் எட்டாத தூரத்தில் முற்றுகைப் படை முகாமிட்டிருந்தது. போர்த்துகேயரின் யாழ்ப்பாணக் கோட்டையின் பலத்தையும், பாதுகாப்பையும், அந்தத் தொடர்ந்த முற்றுகை நிரூபித்தது. முற்றுகையின் பதின்மூன்றாம் நாள், கோட்டையின் தென் பக்கத்தில் கொழும்பில் இருந்து வந்த போர்த்துக்கேயப் படையணி இறங்கியது.

கண்டியரசனின் படை யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட செய்தியை அறிந்துகொண்ட போர்த்துக்கேயத் தேசாதிபதி கொன்ஸ்தாந்திேனா தே சா உடனடியாக லாஸ்கொறின்ஸ்களும், பறங்கிகளும் கொண்ட படையொன்றினைக் கடல் வழியாக தொமிங்கோ கர்வல்லோ சாவி என்பவனின் தலைமையில் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தான்.

கண்டி மன்னனின் படை யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டிருந்தது. அவர்களால் கோட்டையை நெருங்க முடியவில்லை. பீரங்கிக் குண்டுகளுக்கும், துவக்குச் சன்னங்களுக்கும் எட்டாத தூரத்தில் முற்றுகைப் படை முகாமிட்டிருந்தது. போர்த்துகேயரின் யாழ்ப்பாணக் கோட்டையின் பலத்தையும், பாதுகாப்பையும், அந்தத் தொடர்ந்த முற்றுகை நிரூபித்தது. முற்றுகையின் பதின்மூன்றாம் நாள், கோட்டையின் தென் பக்கத்தில் கொழும்பில் இருந்து வந்த போர்த்துக்கேயப் படையணி இறங்கியது.

எதிர்பாராத படையிறக்கம். இவ்வளவு விரைவில் தே சாவின் படை பாதுகாப்புக் கொடுக்க வரமுடியுமா? வந்திருந்தன.

கண்டி மன்னனின் சிங்களப் படை, தொமிங்கோ கர்வல்லோ சாவின் படையினால் நிர்மூலமாக்கப்பட்டன. அத்தபத்து முதலியார் பயங்கரமாகக் கொல்லப்பட்டார். சிறைப்பட்டோர் மிகக் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். பலர் அடிமைகளாக விற்கப்பட்டனர்.

போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டை, எதுவுமே நுழையாததுபோல நிமிர்ந்து நின்றது. கடல் அலைகள் அதன் தென் அரண் சுவரின் கலத்துறையின் அடியை வருடின.

### 5

*1657 ஆம் ஆண்டு மார்கழி, 17.*

யாழ்ப்பாணக் கோட்டைக்கு முப்பத்தியிரண்டு வயதாகின்றது. அதனை யாழ்ப்பாண மக்கள் 'இராசவாசல்' என்று அழைத்தனர். ஏனெனில், சகல நிர்வாக நடவடிக்கைகளும் அந்தக் கோட்டையிலிருந்தே பிறந்தன. இப்போது கோட்டையின் கொத்தளங்களில் திரித் துப்பாக்கி (மார்ச்லொக்) ஏந்திய மிலபார் வீரர்கள் காவல்புரிந்தனர். கோட்டை அரண்சுவர்களில் பறங்கி வீரர்களுடன் காப்பிலி அடிமைகளும் காவலில் ஈடுபட்டிருந்தனர்.

[illegible] ராக வீடோர் தே புசெண்டாவும், வைஸ் கமாண்டராக கஸ்பார் பிகாறோவும் விளங்கினர். இராசவாசல் முதலியாராக நல்லூர் புவிநாயகமுதலியார் இருந்தார். அவரோடு யாழ்ப்பாண இராச்சியத்தின் வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்த முதலியார்களும், கச்சாய் வன்னிமையும் ஒருநாள் கோட்டைக் கமாண்டர் வழங்கிய விருந்தொன்றில் கலந்துகொண்டனர்.

டச்சுக்காரரர் / ஒல்லாந்தர் இலங்கையில் ஆதிக்கம் பெற முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்ற சங்கதிகளைக் கமாண்டர் அனைவருக்கும் எடுத்து விபரித்தான். அவர்களை இந்த மண்ணில் காலூன்ற விடக்கூடாது; அதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பை அவன் கோரினான். 'அதற்குப் பிரதி உபகாரமாக எதையும் தருவேன்' என்றான். அந்த விருந்தில்தான் கச்சாய் வன்னிமை, தனக்கு மனைவியாக ஒரு போர்த்துக்கேயப் பெண் தேவையெனக் கேட்டு வைத்தான். போர்த்துக்கேயக் கமாண்டர் 'கச்சாய் வன்னிமையை அவமானப்படுத்துவதற்காகவும், தமது வல்லாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காகவும் பறங்கிப் பெட்டை நாய் ஒன்றினை அனுப்பிவைத்தான்.

கச்சாய் வன்னிமை போர்த்துக்கேயரை யாழ்ப்பாண மண்ணிலிருந்து துரத்துவதாகச் சபதம் எடுத்து, மன்னார்க் கோட்டையைக் கைப்பற்ற வந்திருந்த ஒல்லாந்தத் தளபதியைக் காண விரைந்து சென்றான்.

### 6

*1658, பெப்ரவரி, 22 ஆம் திகதி.*

ஒல்லாந்தரின் ஆதிக்கத்தின் கீழ் கொழும்பு அடங்கியதன் பின்னரும் இரு ஆண்டுகள் வரை வட பிரதேசம் போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழ் விளங்கியது. போர்த்துக்கேயரின் வட ஆள்புல அதிகாரத்துக்கு ஆதாரமாக விளங்கிய பலமான மூன்று கோட்டைகள் இன்னமும் ஒல்லாந்தரால் கைப்பற்றப்படாதிருந்தன. மன்னார்க் கோட்டையின் துணைவலியோடு போர்த்துக்கேயர், மன்னார் முத்துசலாபத்தில் இன்னமும் முத்துக் குளித்தனர். ஊர்காவற்றுறைக் கோட் [illegible] மின் பலம் கொண்டு, வலிமையான யாழ்ப்பாணக் கோட்டைக்கு மேலதிக பலம் சேர்த்து, யானை வர்த்தகத்தில் தொடர்ந்து ஈடுபட்டனர். எனவே, போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தினுள் இருக்கும் வட ஆள்புலம் கைப்பற்றப்பட வேண்டியது, என ஒல்லாந்தத் தேசாதிபதி விரும்பினான். அதனை நிறைவேற்றுவதற்குரிய தளபதியாக ஆட்மிறல் றைக்கெளவ் வன் ஹூன்ஸ் என்பவன் தெரிவானான், வன்ஹூன்ஸ்க்கு வயது 39.

1500 வீரர்களைக் கொண்ட படையுடனும் பத்தொன்பது யுத்த மரக்கலங்களுடனும் மன்னாரை நோக்கிப் புறப்பட்டான். அக்காலவேளையில் இந்து சமுத்திரத்தில் எதிரிப் போர்க்கலங்களுக்குப் பெரும் சிம்மசொப்பனமாக விளங்கிய நார்டென் என்ற யுத்தக் கப்பல் ஒல்லாந்தக் கப்பல்களுக்கு வழி காட்டி வந்தது.

ஒல்லாந்தப் படைகள் மன்னார்க் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டன. மன்னார்க் கோட்டையைக் கைப்பற்றியதும், தனது படைவீரர்களை இரு பிரிவுகளாகப் பிரித்து, ஒன்றைக் கரையோர நிலப் பாதை வழியே பூநகரிக்கூடாக யாழ்ப்பாணத்திற்கு கச்சாய் வன்னிமை வழிகாட்ட வழிநடத்தி வந்தான்; அவனது கப்பல்கள் கடல் மார்க்கமாக ஊர்காவற்றுறைக் கோட்டையைக் கைப்பற்றுவதற்காக விரைந்தான்.

ஒல்லாந்தப் படைகளை நடத்தி வந்த றைக்ளோவ் வன் ஹூன்ஸ்சை யாழ்ப்பாணத்து மக்கள் வன்கோயன் எனக் குறிப்பிட்டார். இன்னும் பெரிய ஒல்லாந்தேசு எனவும் அழைத்தனர்.

மார்ச் மாதம் 9ம் திகதி ஒல்லாந்தப் படை யாழ்ப்பாணத்திலிருந்த யேசுசபைக் கல்லூரியையும், டொமினிக்கன் சபை ஆலயத்தையும், மடத்தையும் கைப்பற்றிக்கொண்டது. கோட்டைக்கு வெளியில் சிதாரியின் (பறங்கித் தெரு) இருந்த போர்த்துக்கேயர் அனைவரும் ஒல்லாந்தப் படைக்கு அஞ்சி யாழ்ப்பாணக் கோட்டைக்குள் புகுந்து கொண்டனர்.

யாழ்ப்பாணக் கோட்டையை ஒல்லாந்தர் முற்றுகையிட்ட [illegible] சுற்றித் தரைப்புறமாகப் பாசறை அமைத்துக் கொண்டனர். ஊர்காவற்றுறைக் கோட்டையைக் கைப்பற்றிய பின், யாழ்ப்பாணக் கடனீரேரிக்குள் பிரவேசித்த ஒல்லாந்தக் கப்பல்கள் கோமுசாறியின் (தளபதி) கட்டளைக்காகக் காத்திருந்தன. மார்ச் மாதம் 16-ம் திகதியிலிருந்து ஜூன் மாதம் 21-ம் திகதி வரை ஒல்லாந்தரின் முற்றுகை தொடர்ந்தது.

போர்த்துக்கேயரின் பலம் வாய்ந்த யாழ்ப்பாணக் கோட்டையின் நாலாபக்கங்களிலும் ஒல்லாந்தப் படை சூழ்ந்துகொண்டது.

அவ்வேளை யாழ்ப்பாண நகரம் ஒரு சிறிய பட்டினமாக இருந்தது. சத்திரம், பொதுக் கிணறு என்பன அமைந்திருந்தன. தாழ்ந்த கூரைகளைக் கொண்ட கற்கட்டிடங்கள் காணப்பட்டன. மக்களது வீடுகள் விறாந்தைகளையும், தலைவாசல்களையும் கொண்டிருந்தன. வீடுகளின் முன் பக்கங்கள், வீதிப்பக்கமாக இருக்காது உட்பக்கமாக இருந்தன. மண் சுவர்களையும் ஓலைக் கூரைகளையும் கொண்ட வீடுகள் அதிகமாகக் காணப்பட்டன.

அவ்வேளை யாழ்ப்பாண நகரம் ஒரு சிறிய பட்டினமாக இருந்தது. சத்திரம், பொதுக் கிணறு என்பன அமைந்திருந்தன. தாழ்ந்த கூரைகளைக் கொண்ட கற்கட்டிடங்கள் காணப்பட்டன. மக்களது வீடுகள் விறாந்தைகளையும், தலைவாசல்களையும் கொண்டிருந்தன. வீடுகளின் முன் பக்கங்கள், வீதிப்பக்கமாக இருக்காது உட்பக்கமாக இருந்தன. மண் சுவர்களையும் ஓலைக் கூரைகளையும் கொண்ட வீடுகள் அதிகமாகக் காணப்பட்டன.

ஒல்லாந்தர் முற்றுகையிட்டுள்ளனர்; பெரும் யுத்தம் நடக்கப்போகிறது எனக் கேள்விப்பட்டதும் வீடுகளுக்குள் ஒடுங்கிக்கொண்ட மக்கள் மூன்று நாட்களின் பின்னர் வழமைக்குத் திரும்பிக் கடைத்தெருவுக்கு வரத் தொடங்கினர். எவர் ஆண்டாலென்ன என்ற மனப்போக்கு அன்று யாழ்ப்பாண மக்களிடமிருந்தது போலும்.

(தொடரும்)

படிப்பகம்